# வலயக்கல்வி அலுவலகம், தீவகம்
# தரம் 12
# வணிகக்கல்வி I

01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

---

01) வணிகப் பரம்பலின் அடித்தளமாக அமைந்தது எது?

1) கைத்தொழில் புரட்சி 2) பணப் பாவனை 3) பண்டமாற்று
4) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் 5) மிகையினை பரிமாற்றம் செய்தல்

02) பின்வரும் உதாரணங்களுள் விருப்பங்கள் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ள விடையினை தெரிவு செய்க.

1) கல்வி, பொழுதுபோக்கு, சுகாதாரம், தொலைபேசி, தொடர்பாடல்
2) மின்சாரம், கல்வி, சுகாதாரம், தொடர்பாடல், போக்குவரத்து
3) அரச வைத்தியசாலை, தனியார் பாடசாலை, தொலைபேசி, இராணுவ பாதுகாப்புப்படை, விடுதி
4) கல்வி, பொழுதுபோக்கு, தனியார் வைத்தியசாலை, பிரிவெனாக்கல்வி, மின்அஞ்சல்
5) பொலிஸ்படை, உத்தியோகபூர்வ இல்லம், சுகாதாரம், காப்புறுதி, கலவி

03) பின்வருவனவற்றில் தேவைகளின் பண்பு அல்லாதது.

1) வாழ்வதற்கு கட்டாயமாக நிறைவு செய்யவேண்டியது. 2) சகலருக்கும் பொதுவானது
3) தனிநபருக்குரியதாக இருத்தல். 4) வரையறுக்கப்பட்டது
5) வணிகங்களினால் தோற்றுவிக்கமுடியாது

04) வணிகங்களின் பண்புகள், நோக்கங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – விற்பனை அல்லது பரிமாற்றம் இடம்பெறல்
B – இலாபத்தை உச்சப்படுத்தல்
C – புத்துருவாக்கம்
D – பொருளாதாரக் கருமம் ஒன்றாக இருத்தல்.
E – சந்தைப் பங்கை அதிகரிக்கச் செய்தல்.
F – சமூகத்தினதும் மக்களினதும் நலன்

மேலே தரப்பட்டவற்றுள் வணிகங்களது நோக்கங்களாவன,

1) A, C, D 2) B, E, F 3) A, B, E 4) C, E, F 5) A, E, F

05) பின்வருவனவற்றுள் முதலாம் நிலை உற்பத்தியுடன் மட்டும் தொடர்புடையது.

1) மின்சாரம், வாயு, வெப்பம், குளிரூட்டல் வழங்குதல். 2) தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள்
3) நிர்மாணக் கைத்தொழில், சுரங்கமறுத்தல் 4) நிதி, காப்புறுதி ஆதன வியாபாரம்
5) விவசாயம், கால்நடை, மீன்பிடிக் கைத்தொழில்

06) வணிகத்தை நோக்கத்திற்கேற்ப வகைப்படுத்தினால்,

1) தனியார் துறை வணிகம், அரச துறை வணிகம்
2) இலாப நோக்க வணிகம், இலாப நோக்கற்ற வணிகம்
3) சிறிய நடுத்தரளவு வணிகம், பாரியளவு வணிகம்
4) விவசாயம், கைத்தொழில், சேவை வணிகம்

5) முதலாம் நிலை, இரண்டாம் நிலை வணிகம்

07) வணிகக் கருமங்கள் X நிரலிலும் அவற்றுடன் தொடர்புடைய உதாரணங்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| **X நிரல்** | **Y நிரல்** |
|---|---|
| i) நிர்வாகம் | (A) - மூலதனத்தை ஈடுபடுத்துதல் |
| ii) உற்பத்தி | (B) – விளம்பரம் செய்தல் |
| iii) மனிதவளக் கருமம் | (C) - மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளல் |
| iv) நிதிக் கருமம் | (D) – தொழிலாளர்களின் கோவைகளைத் தயாரித்தல் |
| v) சந்தைப்படுத்தல் | (E) – பதவியுயர்வு வழங்கல் |

X நிரலில் தரப்பட்ட வணிகக் கருமங்களுக்கான உதாரணங்கள் Y நிரலில் தரப்பட்டுள்ளன. சரியான ஒழுங்குமுறையில் காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.

1) A, B, C, D, E　　2) B, C, E, A, D　　3) D, C, E, A, B

4) D, A, B, C, E　　5) A, C, B, D, E

08) நவீன தொழில்நுட்ப இயந்திரங்களைப் பயன்படுத்தி மீன்பிடி உற்பத்தியின் விளைதிறனை அதிகரித்துக்கொள்ள முடியும். இவ்வாறான இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கு உரித்தான தொகுதியாக இருப்பது.

1) முதன்நிலை அல்லது விவசாயத்துறை ஆகும்.
2) இரண்டாம் நிலை அல்லது சேவைத்துறை ஆகும்
3) முதன்நிலை அல்லது கைத்தொழில்துறை ஆகும்
4) இரண்டாம் நிலை அல்லது கைத்தொழில் துறையாகும்
5) மூன்றாம் நிலை அல்லது சேவைத் துறை ஆகும்.

09) தைக்கப்பட்ட ஆடை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றில் உற்பத்திக் காரணிகள் நிரல் (1) இலும் அவற்றுக்கான உதாரணங்கள் நிரல் (2) இலுத் தரப்பட்டுள்ளன.

| **நிரல் 1** | **நிரல் 2** |
|---|---|
| i) காலம் | (A) – முகாமையாளர்களின் உளரீதியான உழைப்பு |
| ii) மூலதனம் | (B) – புதிய தொழில்நுட்பம் தொடர்பான தகவல்கள் |
| iii) முயற்சியாண்மை | (C) – தையல் இயந்திரம், உபகரணங்கள் |
| iv) உழைப்பு | (D) – இயந்திரத்தை சேவையில் ஈடுபடுத்தும் காலம் |
| v) தகவல்கள் | (E) – இலாபத்தை அனுபவிப்பவர். |

நிரல் 1 இல் தரப்பட்ட உற்பத்திக் காரணிகளின் வரிசைப்படி நிரல் 2 இல் உதாரணங்கள் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையை தெரிவு செய்க.

1) B, E, C, D, A　　2) D, C, E, A, B　　3) A, C, D, E, B

4) A, B, C, D, E　　5) C, A, B, D, E

10) வணிகத்தில் அக்கறை காட்டும் பிரிவினர்கள் வணிகத்திற்கு முக்கியம் பெறுவதற்கான காரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளது.

(A) – தொடர்ச்சியாகத் தேவையான நிதியினை ஈட்டிக்கொள்வதற்கு.

(B) – நுகர்வோரின் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்கு.

(C) – வரிச்சலுகையினைப் பெற்றுக்கொள்வதற்கு.

(D) – வணிகத்தின் வாழ்தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு.

(E) – குறைந்த கிரயத்தில் நிதியினைப் பெற்றுக்கொள்வதற்கு.

மேலே தரப்பட்டவற்றுள் கடன்கொடுத்தோர் வணிகத்திற்கு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்களாவன.

1) A, D 2) B, E 3) C, D 4) D, E 5) C, E

11) வணிகமொன்றின் வாழ்தன்மையை உறுதிப்படுத்தும் அண்மிய சூழல் காரணியாக இருப்பது.

1) உரிமையாளராவர் 2) போட்டியாளராவர் 3) நிலையான முதலீட்டாளர்களாவர்
4) வாடிக்கையாளராவர் 5) வழங்குநராவர்

12) பின்வரும் அட்டவணையில் வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களும் அவ்வாறு அக்கறை செலுத்துவதற்கான காரணங்களும் தரப்பட்டுள்ளன.

| **அக்கறை செலுத்தும் பிரிவினர்** | **அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள்** |
|---|---|
| (A) உரிமையாளர் | (1) பிணைகள் பாதுகாப்பானது |
| (B) முகாமையாளர் | (2) கடனை மீள அறவிட்டுக் கொள்ளல் |
| (C) ஊழியர்கள் | (3) சந்தைப் பங்கு |
| (D) வழங்குநர்கள் | (4) தொழில் திருப்தி |
| (E) கடன்வழங்குனர் | (5) கடந்தகால தீர்மானங்களின் வெற்றி |

அக்கறை செலுத்தும் பிரிவினர்களையும் அக்கறை செலுத்துவதற்கான காரணங்களையும் பொருத்தும் போது சரியாகக் கிடைக்கும் விடைத்தொகுதியாக இருப்பது.

1) A – 4, B – 1, C – 2, D – 3, E – 5 2) A – 3, B – 4, C – 1, D – 5, E – 2
3) A – 2, B – 5, C – 3, D – 1, E – 4 4) A – 1, B – 2, C – 3, D – 4, E – 5
5) A – 3, B – 5, C – 4, D – 2, E – 1

13) சூழற்காரணிகளது பலம், பலவீனங்கள் சில கீழே தரப்படுகிறது.

(A) – பயிற்சியும் அனுபவமும் உள்ள ஊழியர்கள் காணப்படல்

(B) – பொறுப்பு, வகைகூறல் அற்ற ஊழியர்கள் காணப்படல்.

(C) – பொருத்தமானவாறு ஒழுங்கமைப்பு கட்டியெழுப்பப்பட்டிருத்தல்.

(D) – சரியான தீர்மானமெடுக்கும் ஆற்றல் காணப்படல்.

(E) – பிரிவுகளிடையே சிறந்த இணைப்புக்கள் காணப்படுதல்.

மேலே தரப்பட்டவற்றுள் நிறுவனக் கட்டமைப்பினது பலமாக அமைவது.

1) A, D 2) B, E 3) A, C 4) B, D 5) C, E

14) பின்வரும் அட்டவணையில் பேரினச்சூழல் காரணிகளும் வணிகத்தின் வாழ்தன்மையில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறைகளும் கீழே தரப்பட்டுள்ளது.

| சூழற் காரணி | தாக்கம் |
|---|---|
| i) அரசியல் சூழல் | (A) – சர்வதேச ரீதியாக சட்டதிட்டங்கள் ஏற்படுத்தப்படல் |
| ii) சமூகக் கலாசாரச் சூழல் | (B) – பல்லினச் சமூக அமைப்பு |
| iii) மக்கட் சூழல் | (C) – திறந்த பொருளாதாரக் கொள்கை பின்பற்றல் |
| iv) பூகோளச் சூழல் | (D) – பழக்கவழக்கங்கள் |

மேலேயுள்ள சூழல் காரணிகள் ஏற்படுத்தும் தாக்கங்களை சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையை தெரிவு செய்க.

1) B, A, D, C 2) C, D, B, A 3) A, B, C, D ` 4) C, B, A, D 5) A, D, B, C

15) பின்வருவனவற்றில் வணிகத்தினால் சமூகத்திற்கு நிறைவேற்றப்படும் சமூக ரீதியான பொறுப்பை சரியாகக் காட்டும் விடை.

1) பொருளாதார நலன்களை பெற்றுக்கொள்ளல், தொழில் பாதுகாப்பு வழங்கல்
2) உரிமைகளைப் பாதுகாத்தல், கழிவுப்பொருள் முகாமைத்துவம்
3) வினைத்திறனாகவும் நேர்மையாகவும் முகாமைத்துவக் கருமங்களை நிறைவேற்றல்.
4) வரி செலுத்துதலை சரியாக மேற்கொள்ளல், பசுமை உற்பத்தி.
5) சமத்துவமான நிலை, சுகாதார வசதிகள்.

16) பின்வருவனவற்றில் ‘‘பாவனையைக் குறைத்தல்’’ (reduse) என்பதைக் குறிப்பிடுவது.

1) உயர் பெறுமானம் கொண்ட உற்பத்தியினைக் குறைந்த பெறுமானம் கொண்ட மூலப்பொருள் என்ற நிலைக்கு மாற்றுதல்.
2) சுத்தமான நீரினை பிளாஸ்திக்குப் பொதிகளில் இடாதிருத்தல்.
3) மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் வணிகமொன்று மீன்வளர்ப்பை மேற்கொள்ளல்.
4) உணவுப் பொதி செய்யும் பொலித்தீன்களுக்குப் பதிலாக உணவுப் பெட்டியை பயன்படுத்தல்.
5) காட்டிலுள்ள மரப்பலகைகளை மூலப்பொருளாகப் பயன்படுத்தும் நிறுவனம் காடுகளில் மரங்களை உற்பத்தி செய்யும் வணிகம் ஆரம்பித்தல்.

17) பின்வரும் அட்டவணையில் X நிரலில் வணிகங்களில் செல்வாக்கு செலுத்தும் முறையும், Y நிரலில் அவற்றுக்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| i) உட்கட்டமைப்பு வசதி வழங்கல் | (A) – தனியார் துறைக்கு சமமானதாக வியாபார நிலையங்கள் அமைத்து வாடகைக்கு விடல் |
| ii) போட்டியாளராக செயற்படல் | (B) – சூழல் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் |
| iii) வாடிக்கையாளரொருவராக செயற்படல் | (C) – நுகர்வோர் கருமங்கள் தொடர்பில் சட்டங்கள் விதித்தல். |
| iv) கொள்கைகளை உருவாக்கல் | (D) – வீதிப் பராமரிப்பு, கழிவுப் பொருட்கள் அகற்றல் |
| v) சட்டதிட்டங்களை உருவாக்கல் | (E) – பாதுகாப்புச் சேவை வழங்கலும் பெறலும் |

அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்தும் முறையையும் அதற்கான உதாரணங்களையும் ஒழுங்குமுறையாக காட்டும் விடை யாது?

1) A, B, D, C, E 2) A, C, B, D, E 3) A, B, C, D, E

4) E, A, D, C, B 5) D, A, E, B, C

18) பின்வருவனவற்றில் பங்குடமை வணிகமொன்றினது பண்பு அல்லாதது.

1) இலாபம் பெறும் நோக்கமொன்றிருத்தல்

2) அன்னியோன்னியமான இடைத்தொடர்புகள் இருத்தல்

3) பங்காளர் எண்ணிக்கை 2 – 20 பேராக இருத்தல்

4) வணிக நடவடிக்கையொன்றாக இருத்தல்

5) முகாமையானது இயக்குநர் சபையினூடாக மேற்கொள்ளப்படல்

19) ஏதாவது நாடொன்றில் கம்பனியாகக் கூட்டிணைக்கப்பட்டு அந் நாட்டிலும் வெளியிலும் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கம்பனி எவ்வாறு அழைக்கப்படும்?

1) வரையறுக்கப்பட்ட தனிக் கம்பனி 2) விலைகூறப்பட்ட கம்பனி

3) விலைகூறப்படாத கம்பனி 4) கரைகடந்த கம்பனி 5) வரையறுக்கப்படாத கம்பனி

20) பின்வருவனவற்றில் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியின் பண்பாக அமையாதது.

1) கொள்வனவு செய்த பங்குகளின் பெறுமதிக்கு வரையறுக்கப்பட்டிருக்கும்.

2) பகிரங்கமாக பொதுமக்களுக்குப் பங்குகளை அல்லது பிணைப்பத்திரங்களை வழங்கமுடியும்

3) ஆகக்குறைந்த இயக்குனர் எண்ணிக்கை 02 ஆகும்.

4) பங்கு வழங்கல் மேற்கொள்ளப்படுவதில்லை.

5) அங்கத்தவரின் உச்ச எண்ணிக்கை வரையறுக்கப்படாதிருக்கும்.

21) பின்வருவன வணிக அமைப்புக்களது பண்புகளாகும்.

A – இலாபப் பகிர்வுக்கு ஏதோவொரு இணக்கப்பாடு காணப்படும்.

B – சுயாதீனமான அமைப்பாக இருத்தல்.

C – உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாக இருத்தல்.

D – விசேட அல்லது பொதுச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படல்

E – முழுமையான உரிமை அல்லது கூடுதலான உரிமை அரசிற்கே உரித்துடையது.

மேலுள்ளவற்றில் அரச கூட்டுத்தாபனங்களின் பண்பாக அமைவது.

1) A, D 2) D, E 3) B, E 4) A, C 5) C, D

22) முயற்சியாளரினால் கருத்துக்களைத் தோற்றுவித்தல், சூழலை இனங்காண்பதன் ஊடாக வாய்ப்புக்களை அறிந்து சந்தையை ஆய்வு செய்தல் என்பது முயற்சியாண்மைச் செயன்முறையின் எப் படிமுறையாகும்.

1) உண்மை நிலைக்கு மாற்றுதல் 2) அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளுதல்

3) தேவையான வளங்களை பெற்றுக்கொள்ளல் 4) புத்தாக்கம் புனைதல்

5) எண்ணக்கருக்களை உருவாக்கல்

23) சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்கள் தொடர்பாக சில தகவல்கள் பின்வருமாறு.

A – உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படல்.

B – முயற்சியாண்மைத் திறன் குறைவாக காணப்படல்

C – வணிகர்களின் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் காணப்படல்

D – நிதிப்பிரச்சனை காணப்படல்

E – முகாமைத்துவம் பலவீனமாக காணப்படல்

மேற்குறித்தவற்றுள் சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்கள் தோல்வியடைவதற்கான காரணங்களாக அமைவது.

1) A, C, E 2) B, C, D 3) B, D, E ` 4) C, D, E 5) A, B, E

24) பின்வரும் அட்டவணையில் பணத்தின் கருமங்கள் X நிரலிலும் அவற்றுக்கான உதாரணங்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| **X நிரல்** | | **Y நிரல்** |
|---|---|---|
| i) | பரிமாற்றூடகமாக செயற்படல் | (A) – ரூபா 10,000 காசு சேமிப்பு வைப்பிடல் |
| ii) | பெறுமதிகளை அளவிடும் கருவியாக செயற்படல் | (B) – ஜனவரி மாதத்தில் ரூபா 5,000 க்கு கொள்வனவு செய்த பொருட்களுக்கு மார்ச் மாதத்தில் பணம் கொடுத்தல் |
| iii) | பெறுமானத்திரட்டாக செயற்படல் | (C) – கையடக்கத் தொலைபேசி ரூபா 5,000 க்கு கொள்வனவு செய்தல் |
| iv) | பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகமாக செயற்படல் | (D) – கைப்பை ரூபா 899 என விலைகுறித்தல் |

மேலே காட்டப்பட்ட ஒவ்வொரு தொழிற்பாடுகளுக்குமான உதாரணங்களைத் தெரிவு செய்க.

1) B, C, A, D 2) A, B, C, D 3) C, D, A, B

4) D, C, B, A 5) B, A, C, D

25) வணிக வங்கிகளில் காணப்படும் நடைமுறை வைப்புக்கள், சேமிப்பு நிலையான வைப்புக்கள் முறையே,

1) சட்டப்பணம், அண்மிய பணம் 2) வங்கிப் பணம், அண்மிய பணம்
3) அண்மிய பணம், இலத்திரனியல் பணம் 4) சட்டப்பணம், வங்கிப்பணம்
5) சட்டப்பணம், இலத்திரனியல் பணம்

26) இலங்கையிலுள்ள நிதி நிறுவனங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

A – உத்தரவு பெற்ற நிதிக் கம்பனி

B – காப்புறுதிக் கம்பனிகள்

C – உத்தரவு பெற்ற விசேட வங்கி

D – ஊழியர் நம்பிக்கை நிதியம்

E – அரச சேவைகள் நம்பிக்கை நிதியம்

மேற்குறித்தவற்றில் ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்களாக கொள்ளப்படுவது.

1) A, C, E 2) B, C, D 3) A, B, C 4) B, D, E 5) C, D, E

27) பின்வருவனவற்றுள் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் கருமங்கள் அல்லாதது.

1) சேமிப்பு, நிலையான வைப்புக்களைப் பேணல்
2) கிராமிய மக்களிடையே கூட்டுறவு வாழ்க்கை முறையைப் பிரபல்யப்படுத்தல்
3) அடகு சேவைகள் மேற்கொள்ளல்
4) அங்கத்தவர்களுக்கு விவசாய, உற்பத்தி, கைத்தொழில் சந்தைப்படுத்தலுக்காக கடன் வழங்கல்
5) ஆதனம், காணி வியாபாரம் செய்தல்

28) பின்வரும் தகவல்கள் வங்கி வைப்புக்களுடன் தொடர்புடைய தகவல்களாகும்.

A – காசோலை மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளமுடியும்

B – மீதியின் அடிப்படையில் உயர்ந்த வட்டி கிடைக்கப்பெறும்

C – நிலையான கட்டளை அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும்.

D – மேலதிகப் பற்று வசதிகளைப் பெறமுடியும்.

E – சேமிப்பை நோக்காகக் கொண்டது

மேலுள்ளவற்றுள் நடைமுறை வைப்புக்கு உரித்தான பண்புகள்.

1) B, C, D 2) A, C, D 3) A, B, E 4) A, B, C 5) B, D, E

29) இலத்திரனியல் வியாபாரம் தொடர்பான பின்வரும் அனுகூலங்களுள் வணிகத்துக்கு மட்டும் பொருந்தக்கூடிய அனுகூலமாக அமைவது.

1) சந்தைப்பங்கினை விரிவாக்க முடிதல்
2) கொடுக்கல் வாங்கல்களை விரைவாக மேற்கொள்ள முடிதல்
3) போக்குவரத்தின் இலகுத்தன்மை
4) சந்தைத் தகவல்களை பெறமுடிதல்.
5) ஒப்பீட்டளவில் பொருட்களின் விலை குறைவாகக் காணப்படல்

30) பின்வருவனவன வியாபாரியின் பண்புகள் சில.

A – பல்வேறு வகையான பொருட்களை விற்பனை செய்தல்.

B – வியாபாரக் கழிவுகளை வழங்குதல்

C – சந்தை தொடர்பான ஆய்வு செய்தல்

D – நுகர்வோர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுதல்

மேலுள்ளவற்றில் சில்லறை வியாபாரியின் பண்பாக அமைவது,

1) C, D 2) B, D 3) A, D 4) A, B 5) B, C

31) அ) மனிதத் தேவைகள், விருப்பங்கள் நிறைவேற்றுவதற்குத் தேவையான பொருட்கள், சேவைகள் ……………………………. மூலமே பெற்றுக்கொள்ளப்படும்.

ஆ) மனிதனால் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய …………………… , ………………… நிலமைகளே மனிதத் தேவைகள் ஆகும்.

32) அ) தனக்குத் தேவையானவற்றைத் தானே உற்பத்தி செய்துகொள்வது ……………………… எனப்படும்.

ஆ) வணிகப் பரம்பலின் முதலாவது சந்தர்ப்பம் ……………………. முறையுடன் உருவானது.

33) அ) மனிதவளக் கருமங்களாக, ………………………………… , ………………………….. போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஆ) உயர்ந்த சம்பளத்தைப் பெறுவதற்கு ………………………. வணிகத்தின் இலாபத்தை உச்சப்படுத்துவதற்கு ……………………….. வணிகம் தொடர்பில் அக்கறை காட்டுகின்றனர்.

34) வணிகச்சூழலை கற்பதன் ஊடாக வணிகர் ஒருவர் நிறுவனத்தின் …………..….., ……………….. , ……………….. , …………………….. அறியமுடியும்.

35) அ) தனிநபர்களிடம் காணப்படும் நம்பிக்கைகள், பெறுமதிகள், சமூக விழுமியங்கள் என்பன ……………………. சூழலில் உள்ளடக்கப்படும்.

ஆ) வணிகமொன்றினால் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய பிரிவினர்களாக ………………….. , ……………………. போன்றோரை குறிப்பிடலாம்.

36) அ) எதிர்காலப் பரம்பரையினரின் தேவைகளை நிறைவு செய்வதற்கு இருக்கின்ற உரிமையினை புறக்கணிக்காது நிகழ்காலத் தேவைகளை அடைந்துகொள்வதற்கான அபிவிருத்தி …………………………. ஆகும்.

ஆ) குறைந்த பெறுமதி கொண்ட மூலப்பொருள் ஒன்றை உயர் பெறுமானமுடைய உற்பத்திப் பொருள் எனும் நிலைக்கு மாற்றுதல் ……………………. ஆகும்.

37) அ) இலங்கையிலுள்ள வணிகங்கள் மீது அரசானது செல்வாக்கினை ………………….. , ………………… , ………………………. ஏன்ற அமைப்புக்கள் மூலம் மேற்கொள்கிறது.

ஆ) உழைப்பை வழங்குவதற்கு எதிர்பார்ப்புடன் இருக்கும் அனைவரும் யாதேனும் சேவையொன்றில் ஈடுபட்டிருப்பதுடன், பொருளாதாரத்திற்குரிய அனைத்து உற்பத்தி வளங்களையும் விளைதிறன் கொண்ட உற்பத்திக் கருமம் ஒன்றில் ஈடுபடுத்தி இருத்தல் …………………………………. ஆகும்.

38) அ) யாதேனும் பொருளாதாரமொன்றில் நிதியாண்டு ஒன்றினுள் வரி, வரியல்லாத வகைகளின் மூலம் கிடைக்கும் வருமானம் ……………………………. ஆகும்.

ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சில பொருட்கள் மீது அறவிடப்படும் வரி …………….………. ஆகும்.

39) அ) நுகர்வோரினால் செலுத்தப்படும் பணத்திற்குத் தேவையான அளவிலான திருப்தியை பெற்றுக்கொடுப்பதை உறுதிப்படுத்துவதற்காக இருக்கின்ற சட்டரீதியான காப்பு …………………………… ஆகும்.

ஆ) உற்பத்தி நடவடிக்கைகள், ஒழுங்குபடுத்தல் என்பன தொடர்பாக தேசிய, சர்வதேச அடிப்படையில் தர நியமங்களைத் தயாரித்தல் ……………………………. நோக்கமாகும்.

40) அ) இலங்கையிலுள்ள கம்பனியொன்றினைக் கூட்டிணைப்பதாயின் ……………………………… கம்பனிச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்யப்படல் வேண்டும்.

ஆ) ஏதாவது பொருள் அல்லது சேவை ஒன்றைக் குறித்த சந்தைப் பிரதேசமொன்றில் விற்பனை செய்வதற்கு வேறோர் வணிக நிறுவனத்திற்கு சந்தர்ப்பம் வழங்குமாயின் அவ் வணிக அமைப்பு …………………………. ஆகும்.

41) அ) குறைவான விலையில் மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்குவதே ………………………………. முக்கிய நோக்கமாகும்.

ஆ) கம்பனியின் மொத்த மூலதனத்தில் 51% த்தையும் விட கூடியளவினை அரசு அல்லது அரச நிறுவனம் ஒன்றிற்கு உரித்துடையது ………………………. ஆகும்.

42) அ) மூலதனத்திற்கும் ஊழியத்திற்குமிடையில் இடைநடுவராகச் செயற்படுதல் …………………… ஆகும்.

ஆ) வணிகத்தின் தலைவன் தனக்குக் கீழ் பணிபுரிவோர்களைக் கொண்டு கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்தி நெறிப்படுத்துவது …………………………. ஆகும்.

43) அ) 4 மில்லியனுக்கு மேற்படாத மூலதனம், 25 க்கு குறைந்த ஊழியர்களைக் கொண்டியங்கும் வணிகம் …………………………………. ஆகும்.

ஆ) சிறிய நடுத்தரளவு வணிகங்களை ஊக்குவிப்பதற்காக அரசு கடைப்பிடித்திருக்கும் படிமுறைகளாவன ……………………………………. , ……………………………. ஆகும்.

44) அ) வங்கிக் கணக்கில் பணமுற்றவர்களால் மட்டும் வங்கிகளில் பெறக்கூடியது …………………………………….. ஆகும்.

ஆ) நடைமுறைக் கணக்கைப் பேணிச் செல்வதற்கும் வெளிநாட்டு செலாவணிக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கும் அனுமதியற்ற வங்கி ………………………………….. ஆகும்.

45) அ) வங்கியானது நடைமுறைக் கணக்கிலுள்ள மீதியை விடக் கூடுதலான குறிப்பிட்டளவு வரை காசோலை வழங்குவதற்கு வணிக வங்கிகளால் வழங்கப்படும் அனுமதி …………………… ஆகும்.

ஆ) வாடிக்கையாளர்கள் வங்கிக்குச் செல்லாது தனது தொலைபேசியைப் பயன்படுத்த வணிக வங்கிக் கருமங்களை நிறைவேற்றுதல் ………………………………. ஆகும்.

46) அ) காசோலையுடன் தொடர்புடைய பிரிவினர்களாக ……………………… , ………………….. , ………………………… ஆகியோா் உள்ளனர்.

ஆ) …………………………… மூலம் கடன்அட்டை, வரவு அட்டை, ATM அட்டை போன்றவற்றின் கருமங்களை மேற்கொள்ளமுடியும்.

47) அ) காப்புறுதி முன்மொழிவுகளைச் சமா்ப்பிக்கும் அதாவது காப்புறுதிப் பாதுகாப்பை பெற்றுக்கொள்ளும் நபா் …………………………………… எனவும், காப்புறுதி முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளும் பிரிவினா் ………………………….. எனவும் குறிப்பிடப்படும்.

ஆ) ஆதனம் ஒன்றிற்கு சேதம் ஏற்படுமாயின் அந்த ஆதனத்தை உரிய நிலைமைக்கு கொண்டுவருவதற்கு தேவையான தொகையை நட்டஈடாக வழங்குதல் ………………………….. ஆகும்.

48) அ) தொலைநகல், இலத்திரனியல் தபால், இலத்திரனியல் அறிவித்தல் பலகை, குறுஞ்செய்தி சேவை (SMS) போன்றன ………………………………….. தொடர்பாடல் ஆகும்.

ஆ) தொலைபேசி வலையமைப்பின் உதவியுடன் நிறுவனத்தினுள் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கான தனிப்பட்ட முறையில் நிறைவேற்றப்படுகின்ற தொலைபேசி வலையமைப்பு ………………………………. ஆகும்.

49) அ) போக்குவரத்துத் துறையின் அடிப்படைகளானவை …………….. , …………………… , …………………….. , ……………………….. ஆகும்.

ஆ) வேகம் கூடியதும், விரைவாக அழிவுறும் பொருட்களுக்கு பொருத்தமானதும், வீதிப் பராமரிப்புச் செலவும் இன்றி மேற்கொள்ளக்கூடிய போக்குவரத்து …………………………… ஆகும்.

50) அ) கொள்வனவாளரொருவருக்கும் விற்பனையாளரொருவருக்கும் இடையே உற்பத்திப் பொருட்களினதும் சேவைகளினதும் உரிமைப் பரிமாற்றம் செய்யும் செயல்முறையே ……………….. எனப்படும்.

ஆ) ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களது விபரங்கள், விலைமட்டங்கள், கொடுப்பனவு நிபந்தனை, பயணப்பாதை, நிராகரிப்பதற்கான நிபந்தனைகளை உள்ளடக்கிய ஆவணமொன்று …………………………. ஆகும்.